**O.S.No. 93/2018**

**DW 1:** சுந்தரமூர்த்தி தேதி 10.3.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்துகள் அனைத்தும் பூர்வீக சொத்துகள் என்றால் சரிதான். என் தாத்தா சுயமாக சம்பாரித்தவை. வழி வழியாக வந்த சொத்து 2.68 ஏக்கர். என் தாத்தா சுயமாக சம்பாரித்த சொத்து 8.85 ஏக்கர். என் தாத்தா சுயமாக சம்பாரித்தாக யார் சொல்லி தெரியும் என்றால் என் அம்மா சொல்லி தெரியும். 2.68 ஏக்கர் முழுவதும் விவசாய பூமியா என்றால் விவசாய பூமி அல்ல. வாய்க்கால் தண்ணீர் வந்தால் விவசாயம் செய்யும் பூமி. என் தாத்தா முத்துகவுண்டருக்கு விவசாயம் தவிர வேறு ஏதேனும் தொழில் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் தந்தையும் என் தாத்தாவும் நிரந்தர பாகப்பிரிவினை பத்திரம் எதுவும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன். யார் முன்னிலையில் எந்த தேதியில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று நான் குறிப்பாக என் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டதின் அடிப்படையில் பிவாசாஆ 4 உயில் சாசனம் எழுதப்பட்டதாக சொல்கிறேனா என்றால் ஆம் அவ்வாறு தான் சொல்கிறேன். வாய்மொழியாக எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்பதால் தான் அதனை குறித்து விளக்கமாக என்னுடைய எதிர் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரிவினை ஆகாத சொத்தை வாய்மொழியாக பிரிந்ததாக சொல்லி நானே உருவாக்கி கொண்ட ஆவணம் தான் பிவாசாஆ 4 என்றால் சரியல்ல. எனக்கும் என் அப்பாவிற்கும் சுமூகமான உறவு இருந்ததில்லை. என் 15 வயதில் இருந்தே என் அப்பா இறக்கும் வரை எனக்கும் என் அப்பாவிற்கும் சுமூகமான உறவு இருந்ததில்லை. என் தாத்தா இறக்கும் வரை நான், என்

பெற்றோர், சகோதரி சுமூகமான உறவில் ஒன்றாக தான் குடியிருந்தோம். என்னுடைய 15 வயதிற்கு பின்னிட்டு எனக்கும் என் அப்பாவிற்கும் என்ன பிரச்சனை என்றால் சொத்து பிரச்சனை தான். பிவாசாஆ 4 முத்துகவுண்டரால் ஏற்படுத்தப்பட ஆவணம் அல்ல என்றும் அதில் உள்ள கையெழுத்துகளும் முத்துகவுண்டரால் போடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1987 ல் அ வ எண் 282/87 வழக்கில் சொத்து எனக்கு தான் பாத்தியம் என்று சொல்லியிருக்கிறேன். அ வ எண் 282/87 வழக்கு என் தாத்தா இறந்த பிறகு தாக்கல் செய்யப்பட்டது. என் தாத்தா 1983 ல் இறந்தார். தேதி மாதம் ஞாபகத்தில் இல்லை. என் தாத்தா இறந்த பின்னிட்டு அ வ எண் 282/87 வழக்கை என் தந்தை விஸ்வநாதன் மீது தாக்கல் செய்தேன். அ வ எண் 282/87 வழக்கில் என் தந்தையின் அவருடைய சகோதரிகள் வாதிகள் செல்லம்மாள், சம்பூரணம், விஜயலட்சுமி, வரதராஜனின் தாயார் சரஸ்வதி யாரும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அ வ எண் 282/87 வழக்கில் உயில் சாசனப்படி சொத்து முழுவதும் எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியிருந்தேன். என் தந்தையை மட்டும் தரப்பினராக சேர்த்து அவருடைய சகோரிகளை சேர்க்காமலும் இருந்ததற்கு காரணம் என்ன என்றால் என் தந்தையின் சகோதரிகள் சொத்திற்கு பாத்தியம் கொண்டாட மாட்டோம் என்று சொன்னதால் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை. வாய்மொழியாக சொன்னார்கள். முத்துகவுண்டரின் வாரிசாக என் தந்தையை மட்டும் சேர்த்து அ வ எண் 282/87 வழக்கை தாக்கல் செய்தேன். அந்த வழக்கை நானும் என் தந்தையும் சமாதானமாக முடித்து கொண்டோம் என்றால் சரியல்ல. பிவாசாஆ 7ன் படி 15.7.1987 ல் அ வ எண் 282/87 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 30.10.1987 ல் வழக்கின் தீர்ப்பானது என்றால் சரிதான். என் தாத்தாவின் பெண் வாரிசுகளான செல்லம்மாள், சம்பூரணம், விஜயலட்சுமி, வரதராஜனின் தாயார் சரஸ்வதி தரப்பினராக சேர்க்காமல் அவர்களுடைய பங்குரிமையை ஏமாற்றும் எண்ணத்தில் நானும் என் தந்தையும் சேர்ந்து அ வ எண் 282/87 வழக்கை தாக்கல் செய்து பெற்று கொண்ட தீர்ப்பு பிவாசாஆ 7 இவ்வழக்கு வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாய்மொழியாக

பங்கு கோர போவதில்லை என்று என் தந்தையின் சகோதிரிகள் சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தையின் சகோதரிகளிடம் இருந்து பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 7 ன் படி பெற்ற தீர்ப்பு சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ 7 ன் அடிப்படையில் ஆன இறுதிநிலை தீர்ப்பாணை பிவாசாஆ 8 சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. அ வ எண் 282/87 தீர்ப்பின் அடிப்படையில் தான் மற்ற ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். சட்டப்படியான தீர்ப்பு அல்லாத ஆவணத்தின் அடிப்படையில் பின்னிட்டு ஏற்பட்ட எந்த ஒரு ஆவணமும் வாதிகளுடைய தாவா சொத்தின் பங்கை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.